**தலைப்பு 017 – பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 017 - பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 07 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிராகரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவின மதிப்பீடுகளை தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணம் 127(5) இன் பிரகாரம், மதிப்பீடுகளின் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலவினங்களுக்கிடையில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான வேறுபாடுகள் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றமை தொடர்பில் பொறுப்புடன் செயற்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் நி.பி. 66 இன் மூலமான மாற்றல்களின் ஊடாக 4 மீண்டெழும் செலவின விடயங்களின் மற்றும் 2 மூலதன செலவின விடயங்கள் வருடாந்த பாதிடப்பட்ட நிதியேற்பாடு 8.6 சதவீதத்திலிருந்து 150 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், 7 மீண்டெழும் செலவின விடயங்களின் வருடாந்த நிதி ஒதுக்கீடு 3.6 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் சரியாகத் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் நாட்டில் அதிகரித்து வரும் பணவீக்கம், பொருளாதார மந்தநிலை மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணிகளைக் கருத்தில் கொண்டு, மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சில செலவினப் விடயங்களின் ஒதுக்கீடுகளை அதிகரிக்கவும், கட்டுப்படுத்தக்கூடிய காரணிகளை எதிர்கொண்டு ஒதுக்கீடுகளை குறைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளின் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 34,704 தொகையான பொறுப்புகள் திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், அந்த பொறுப்புகள் 2023 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்பட்டிருந்தது. | “பீ” வகுப்பு திணைக்களமொன்றில் CIGAS கட்டமைப்பினுள் செலவினம் மேற்கொள்வதற்கு முன்னரே பதிவேற்றம் செய்தல் (Commitment Upload) இடம்பெறாததுடன், அரச கணக்குகள் வழிகாட்டிக்கமைய அனைத்து பொறுப்புகளும் புதிய சிகாஸ் வலையமைப்பு உள்ளீட்டத்தில் உரிய திகதியில் பதிவேற்றப்பட வேண்டும். | திறைசேரியின் அச்சீட்டு பிரதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் தொகைகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| i. | நிதிப் பிரமாணம் 138(8) | 1,185,630 | செலவினங்களை சான்றுபடுத்தாது 02 உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தாமதத்தின் காரமணாக தவறு ஏற்பட்டுள்ளது. திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க உரிய அறிவுரை வழங்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவினங்கள் சான்றுபடுத்தப்பட்டதன் பின்னர் உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| ii. | நிதிப்பிரமாணம் 225(4) | 368,973 | 04 உறுதிச்சீட்டுக்களின் அவற்றுக்கான தயாரித்த அல்லது சரிபார்க்கும் உத்தியோகத்தர் தமது சிறு கையொப்பம் இட்டிருக்கவில்லை. | தாமதத்தின் காரமணாக தவறு ஏற்பட்டுள்ளது. திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவினங்கள் சான்றுபடுத்தப்பட்டதன் பின்னர் உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இடம்பெறாதிருக்க உரிய அறிவுரை வழங்கப்பட்டது. | பட வேண்டும். |
| iii | நிதப்பிரமாணம் 232(2) மற்றும் 245(1) | 168,073 | செலுத்திய தொகையை உறுதிச்சீட்டில் எழுத்துக்களில் குறிப்பிட்டிருக்கவில்லை. | தாமதத்தின் காரமணாக தவறு ஏற்பட்டுள்ளது. திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க உரிய அறிவுரை வழங்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவினங்கள் சான்றுபடுத்தப்பட்டதன் பின்னர் உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | அரச கணக்குககள் சுற்றறிக்கை | | | | |
| | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டியின் 6.2 ஆம் பந்தி | | அறிக்கையிடும் நிறுவுனத்திற்குரிய செலவின விடயங்கள் மாத்திரம் மாதிரிப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டிராததுனட், இந்த நிறுவனத்திற்கு பொருத்தமற்ற மாதிரிப் படிவங்களும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடங்கத்தில் அத்தியாவசியமான செலவின விடயங்கள் மற்றும் மாதிரிப் படிவங்களில் பொருத்தமற்ற பகுதிகள் அகற்றப்பட்டு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை 02/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கமைய மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கை வழிகாட்டல் இலக்கம் 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி அதற்கிணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையில் காணப்படும் வழிகாட்டல்களுக்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வுப் பணி உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுமார் 40 பதவியணியினரை கொண்ட சிறு அலுவலகமொன்றான சபை முதல்வரின் அலுவலகம் எனது நேரடி கண்காணிப்பின் கீழ் ஆக்கபூர்வமான நடைமுறையொன்றின் கீழ் பேணிச் செல்லப்படுகின்றமையை சான்றுபடுத்த முடியும். | சட்டத்திற்கமைய இணங்க செயற்பட வேண்டும். |